


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.12.2025) மதுரையில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர்கள் மாநாட்டில், ஐந்து தொழில் நிறுவனங்களின் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள், நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.12.2025) மதுரையில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர்கள் மாநாட்டில், பாரம்பரியம் மற்றும் புதிய வாய்ப்புகள் இணையும் முன்னோடியான நகரமாக மதுரை வளர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கில் நகர ஊரமைப்பு இயக்ககம் (DTCP) தயாரித்துள்ள "மதுரை மாஸ்டர் பிளான் 2044 னை வெளியிட்டார். நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.12.2025) மதுரை மாவட்டம், பந்தல்குடி வாய்க்காலில் 69 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாயின் இருபுறமும் வெள்ள தடுப்பு பக்கவாட்டு சுவர் கட்டும் பணிகள், கால்வாயில் தண்ணீர் செல்லும் திறனை மேம்படுத்துவதற்காக மண்படுகைத் தளத்தை கான்கிரீட் தளமாக மாற்றம் செய்யும் பணி உள்ளிட்ட பல்வேறு கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், கழக பொறியாளர் அணியின் மாநில துணைச் செயலாளரும் கடலூர் மண்டல பொறுப்பாளருமான முனைவர் சி.பிரதீப் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்தில், கொடி நாளையொட்டி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, அவர்களிடம் கொடி நாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பொதுத்துறை கூடுதல் செயலாளர் கே.பாலசுப்பிரமணியம், முன்னாள் படைவீரர் நல இணை இயக்குநர் மேஜர் சுரேஷ் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்தில் கொடி நாளையொட்டி, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, கொடி நாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று(7.12.2025) மதுரையில் நடைபெற்ற, மக்கள் விடுதலை கட்சியின் நிறுவனத் தலைவர் சு.க.முருகவேல்ராஜன் அவர்களின் மகன் இந்திர தனுஷ் ராஜன் சாதனா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, , எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## மதுரை மாவட்டம்

# பந்தல்குடி வாய்க்காலில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு!

மதுரை, டிச. 8 –

மதுரை மாவட்டத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம் திறப்பு விழா, மதுரை TN Rising முதலீட்டாளர்கள் மாநாடு மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.12.2025) பந்தல்குடி வாய்க்காலில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 31.5.2025 அன்று மதுரை மாவட்டத்தில் அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தபோது பந்தல்குடி வாய்க்காலை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்ட போது, தூர் வாரும் பணிகளையும், சுற்றுச்சுவர்களை கட்டும் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் பந்தல்குடி கால்வாயில் 69 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாயின் இருபுறமும் வெள்ள தடுப்பு பக்கவாட்டு சுவர் கட்டும் பணிகள், கால்வாயில் தண்ணீர் செல்லும் திறனை மேம்படுத்துவற்காக மண்படுகைத் தளத்தை கான்கிரீட் தளமாக மாற்றம் செய்யும் பணி, கால்வாயில் குப்பைகள் மற்றும் இதர கழிவுப் பொருட்கள் கொட்டுவதை தடுப்பதற்காக பக்கவாட்டு சுவரின் மேற்புறத்தில் சுமார் இரண்டு மீட்டர் உயரத்திற்கு கம்பிவேலி அமைக்கும் பணி, கால்வாயின் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்கு செல்வதற்காக ஏற்கனவே கட்டப்பட்டிருந்த சிறு பாலங்களில் பழுதடைந்து மோசமான நிலையிலுள்ள மூன்று சிறு பாலங்களை மறுகட்டுமானம் செய்யும் பணி ஆகிய பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது இப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடித்திட வேண்டும் என்று அலுவலர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டார்.

இந்த பந்தல்குடி வாய்க்கால் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம், பக்கவாட்டு வெள்ள தடுப்புச்சுவர் கரைமட்டத்திற்கு மேல் ஒரு மீட்டர் அளவிற்கு கட்டப்படவுள்ளதால் வெள்ளநீர் வெளியேறுவது தடுக்கப்படும், கால்வாயின் தரைதளம் கான்கிரீட் தளமாக மாற்றப்படவுள்ளதால் நீரின் ஓட்ட வேகம் அதிகரித்து கால்வாயில் நீர் தேங்காத நிலை ஏற்படும், பக்கவாட்டுச் சுவரின் மீது கம்பி வேலி அமைக்கப்பட்டு கால்வாயில் குப்பைகள் மற்றும் இதர கழிவுபொருட்கள் கொட்டுவது தடுக்கப் படும். இதன்காரணமாக, இப்பகுதி மக்கள் மழை காலங்களில் வெள்ள அபாயமின்றி யும், நோய் தொற்று இல்லாமலும் வாழ வழிவகை செய்யப்படும்.

இந்த ஆய்வின்போது, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சிந்து சமவெளி நாகரிகத்தை ‘சிந்து’ சரசுவதி நாகரிகம் என வரலாற்றைத் திரிக்கும் ‘கோவை கருத்தரங்கம்’

# மதவெறி அமைப்பான தென்னிந்திய ஆய்வு மையம் (CSIS) கல்லூரிகளுக்குள் கால் வைக்காமல் தடுப்போம்!

## கழக கல்வியாளர் அணித் தலைவர் – புலவர் செந்தலை ந.கவுதமன் கண்டன அறிக்கை!

கோவை, டிச.8–

சிந்து சமவெளி நாகரிகத்தைச் ‘ சிந்து சரசுவதி நாகரிகம் ‘ என வரலாற்றைத் திரிக்கும் கோவைக் கருத்தரங்கம் என்றும் மதவெறிக் கிளை அமைப்பான ‘ தென்னிந்திய ஆய்வு மையம் ( CSIS ) ‘ கல்லூரிகளுக்குள் கால் வைக்காமல் தடுப்போம் என்றும் கழகக் கல்வியாளர் அணித் தலைவர் செந்தலை ந.கவுதமன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–


ஆர்.எஸ்.எஸ். மதவெறி அமைப்பின் கிளை அமைப்பே தென்னிந்திய ஆய்வு மையம் எனும் சி.எஸ்.ஐ.எஸ்.!

தமிழ்நாடு முழுவதும் கல்லூரிகளுக்குள் கருத்தரங்க வேடத்தில் புகுந்து ஆள் பிடிப்பதும் காவிமயமாக்குவதும் இந்த அமைப்பின் வேலை.

மாணவர்களைப் பிளவுபடுத்தும் வேலையையும் சாதி,மத வெறியர்களாக்கும் வேலையையும் வெகுநுணுக்கமாக இவ்வமைப்பு நிகழ்த்தி வருகின்றது.

இந்த மதவெறி அமைப்பை அனுமதித்து வெளிப்படையாக ஒத்துழைக்க முன்வந்திருக்கிறது கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி.

தமிழ்நாட்டரசின் நிதியில் இயங்கும் அரசு உதவிபெறும் கல்லூரி இது ! வெளிப்படையாக மதவெறி அமைப்போடு



கைகோத்துச் செயல் படும் துணிச்சல் இந்தக் கல்லூரிக்கு எப்படி வந்தது ?

உயர்கல்வித்துறை மிகுந்த கவலையோடு இக்கல்லூரி மீதும் , நச்சுவிதை தூவும் ஆசிரியர்கள் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இளையதலைமுறையை மதவெறிப் பிடிக்குள் சிக்காமல் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமையும் அறிவாளர் கடமையும் ஆகும்.

**கருத்தரங்கம் நடத்துவது தமிழ்த்துறை !**

கட்டுரையைத் தமிழில் மட்டுமல்ல; இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் கூட எழுதலாம் என்கிறது அறிக்கை . உள்நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள இந்த ஒருவரி போதாதா?

சிந்து சமவெளி நாகரிகத்தைச் ‘ சிந்து சரசுவதி நாகரிகம் ‘ எனக் கொச்சைப்படுத்துவது , தமிழர் வரலாற்றைத் தாழ்த்தும் அழிவுமுயற்சி என்பதை அறியாதவர்களா ஆசிரியர்கள்?

தங்கள் பெயரை இந்த அறிக்கையில் போடச் சம்மதித்தவர்கள், எந்த நெருக்கடியால் இப்படிச் செய்தார்கள் என்பதை அரசு கண்டறிய வேண்டும்.

கல்லூரிகளை மதவெறியர் பிடிக்குள் கொண்டுசெல்லும் இதுபோன்ற அழிவுமுயற்சிகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். கல்வித்துறையைக் காவிமயமாக்கக் கைகொடுப்போரை அடையாளம் காண வேண்டும் ; அப்புறப் படுத்த வேண்டும்.

மனிதநேயம் காப்பாற்றப்பட மதவெறி முயற்சிகளைக் களையெடுப்பது மிக முக்கியமான பணி .

மதவெறியை மறைமுகமாகத் தூண்டும் சி.எஸ். ஐ.எஸ். போன்ற அமைப்புகள், கல்லூரிகளுக்குள் நுழைய விடாமல் தடுக்க வேண்டும்.

நஞ்சுக்கு இனிப்பு தடவி நீர்வளப் பாதுகாப்பு போன்ற முகமூடிகளோடு வருவது அவர்களின் வழக்கம். முகமூடியைக் கிழித்துக் காட்டி மதவெறிக் கோரமுகத்தை அடையாளம் காட்டும் கடமை, அறிவு வளர்ச்சியை விரும்பும் அனைவரின் கடமை.

கோவைக் கல்லூரியில் திசம்பர் 12, 13 நிகழவுள்ள கருத்தரங்க முகமூடி அழிவுச் செயல் நிகழாமல் தடுப்பது உடனடித் தேவை என தி.மு.க. கல்வியாளர் அணி தலைவர் செந்தலை ந.கவுதமன் தெரிவித்துள்ளார்.